# குழித்துறை நகராட்சி

## குழித்துறை நகர்மன்றத்தின் **சாதாரணக்கூட்டம் 29-11-2024 வெள்ளிக்கிழமை மாலை 4.00** மணிக்கு நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

### நகர் மன்ற தலைவர் திரு.பொன். ஆசைத்தம்பி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்

3-வது வார்டில் வெட்டுக்காட்டுவிளை திரு. லூக்காஸ் வீட்டு பக்கம் உள்ள மின்கம்பத்தில் மின் விளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.1059 தீர்மானிக்கப்பட்டது.

### 4-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.செ. லலிதா கொண்டு வரும் தீர்மானங்கள்

1) ஈழக்குடி விளையில் சத்தியராஜ் அவர்கள் வீட்டுக்கு செல்லும் பாதையில் உள்ள மின்கம்பங்களில் மின் விளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

   மன்றத்தீர்மான எண்.1060 (1) தீர்மானிக்கப்பட்டது.

2) கோட்டவிளையில் செல்லும் சாலையில் உள்ள மின் கம்பங்களில் மின்விளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

   மன்றத்தீர்மான எண்.1060 (2) தீர்மானிக்கப்பட்டது.

3) கோலக்காட்டுவிளையில் போக்குவரத்துக்கு இடையூறாக நிற்கும் 22 என்ற மின்கம்பத்தை மாற்றியமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

   மன்றத்தீர்மான எண்.1060 (3) தீர்மானிக்கப்பட்டது.

### 7-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.U.R. விஜயலெஷ்மி கொண்டு வரும் தீர்மானம்

7-வது வார்டில் CKP லைன் சாலை வடிகால் மற்றும் சாலை சரி செய்ய மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.1061 தீர்மானிக்கப்பட்டது.

### 9-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.எம்.பி. ரவி கொண்டு வரும் தீர்மானம்

மார்த்தாண்டம் பதிவாளர் அலுவலகத்திற்கு முன்பக்க பகுதியில் Inter Lock கல் பதிக்கப்பட்டிருந்தது. அது புதிய குடிநீர் குழாய் போடும் போது பலமுறை குழிதோண்டப்பட்டது. அதனால் அந்த பகுதி மிகவும் குண்டும்

குழியுமாக பொதுமக்கள் நடந்து கூட செல்ல முடியாத சூழ்நிலை உள்ளது. முக்கியமாக பஸ் நிறுத்தம் உள்ளது. எனவே அந்த பகுதியில் Inter Lock குண்டு குழிகளை நிரப்பி சரியான முறையில் பதிக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.1062
தீர்மானிக்கப்பட்டது.

10-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.ஞா. ஜெயின் சாந்தி கொண்டு வரும் தீர்மானம்

வார்டு எண் 10-ல் பழவார் சாலையில் உள்ள மழைநீர் ஓடைகளை சரி செய்து அதன் மேல் சிலாப் போட மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.1063
தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண்.1.

. குழித்துறை நகராட்சியில் நடைபெற்று வரும் திட்டப்பணிகள் குறித்து பத்திரிக்கை மூலம் விளம்பரம் செய்த வகைக்கு கீழ்கண்டுள்ளவாறு தொகைப் பட்டியல் பெறப்பட்டுள்ளது.

1) தினமலர் - ரூ.18,900/-
2) தினகரன் - ரூ. 9,975/-
3) தீக்கதிர் - ரூ. 9,950/-
4) மாலை தமிழகம் - ரூ.23,100/-
5) ஈவ்னிங் தமிழ்நாடு - ரூ.23,100/-
6) மாலை மலர் - ரூ. 9,912/-

மேற்கண்டுள்ளவாறு குறிப்பிட்ட தொகையினை உரிய பத்திரிக்கை நிறுவனங்களுக்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.1379/2019/இ1.

மன்றத்தீர்மான எண்.1064 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.2</u>

குழித்துறை நகராட்சி மார்த்தாண்டம் காய்கறி சந்தை சாலையில் இருக்கும் RCC-ல் தினசரி பெறப்படும் பிளாஸ்டிக் கழிவுகளை அப்புறப்படுத்திட 05-11-2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரிய வகைக்கு தினத்தந்தி பத்திரிக்கையிலிருந்து ரூ.13419/-க்கான செலவினப்பட்டியல் பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட தொகையினை அந்நிறுவனத்திற்கு வழங்கிட மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

<u>அ.கு.:-</u> மன்றம் முடிவு செய்யலாம்.
**ந.க.எண்.**1783/2024/இ1.

மன்றத்தீர்மான எண்.1065 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.3</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான வாகனம் எண்.TN.75.AZ.2768-ல் புதிதாக கிளச் அசெம்பிள் மாற்றப்பட்டதற்கான செலவின தொகை ரூ.20548/-ல் வாரண்டி தொகை 50% தவிர்த்து ரூ.11504/-ஐ டெரிக் மோட்டார்ஸ் நாகர்கோவில் என்ற நிறுவனத்திற்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு.:-</u> மன்றம் முடிவு செய்யலாம்.
**ந.க.எண்.**1247/2022/இ1.
மன்றத்தீர்மான எண்.1066 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.4</u>

குழித்துறை நகராட்சி மார்த்தாண்டம் சாலையில் இயங்கி வரும் RCC-ல் தினசரி பெறப்படும் பிளாஸ்டிக் கழிவுகளை செட்டிநாடு சிமெண்ட் நிறுவனம் காரைக்கால் கொண்டு செல்லும் பணி மேற்கொள்ள 05-11-2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டன.

1) Nikkesh Enter prises - மதிப்பீடு விலை விகிதம்
2) Esha Enter prises - 33.33% மதிப்பீட்டை விட அதிகம்

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீட்டு விலை விகிதத்தில் கொடுத்துள்ள “Nikkesh Enter prises” என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.
<u>அ.கு.:-</u> பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண்.**1783/2024/இ1.

மன்றத்தீர்மான எண்.1067 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.5

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் TN.75L.0828-ல் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்திட விலைப்புள்ளிகள் கோரியதில் பின்வருமாறு விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

1) Jals Auto Mobiles - ரூ.70,300/-
2) Mathava Motors - ரூ.79,500/-
3) Akshaya Motors - ரூ.73,020/-

மேற்படி வரப்பெற்றுள்ள 3 விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள “Jals Auto Mobiles” என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளிக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

அ.கு.:- பணியின் அவசர அவசியத்தை கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1002/2012/இ1.

மன்றத்தீர்மான எண்.1068
அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.6

குழித்துறை நகராட்சியில் வார்டு எண்.5 ஆர்.சி.தெருவில் அமைந்துள்ள நூலகம் பராமரிப்பு செய்யும் பணிக்கு ரூ.3.60 இலட்சம் மதிப்பீட்டில் மன்ற தீர்மான எண்.999, நாள் 19-09-2024-ன்படி மன்ற ஒப்புதல் பெறப்பட்டு 15-11-2024-ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | திருமதி.P. சரோஜா | 0.12% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.A. ஆன்றணி | 1.17% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரிய திருமதி.P. சரோஜா என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்து மன்றத்தின் முடிவிற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.1874/2024/இ1.

மன்றத்தீர்மான எண்.1069 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.7</u>

குழித்துறை நகராட்சியில் KNMT 2024-2025 TURIP 2024-2025 ஆகிய திட்டத்தின்கீழ் வளர்ச்சி பணிகள் நடைபெறுவதாலும், இந்நகராட்சியில் தட்டச்சர் பணி காலியாக உள்ளதாலும் ஒப்பந்ததாரர் மூலமாக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட தினசரி ஊதியம் ரூ.730/- வீதம் ஒராண்டிற்கு ஒப்பந்த பணி மூலம் தட்டச்சர் பணி நியமனம் செய்திட அனுமதி வேண்டப்படுகிறது.

மாவட்ட ஆட்சியர் நிர்ணயிக்கப்பட்டுள்ள தினசரி ஊதியம் = ரூ.730/-

ஒரு வருடத்திற்கு 365 x 730/ நாள் = 2,66,450

| | | |
|---|---|---|
| GST 18% | = | 47,961 |
| LS | = | 589 |
| மொத்தம் | | 3,15,000 |

(ரூபாய் மூன்று இலட்சத்து பதினைந்தாயிரம் மட்டும்)

மேற்கண்டவாறு பணி மேற்காள்ள மதிப்பீடு தொகை ரூ.3,15,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு.:-</u> மன்றம் முடிவு செய்யலாம்.

ந.க.எண்.2781/2024/இ1.

மன்றத்தீர்மான எண்.1070 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.8</u>

குழித்துறை நகராட்சியில் தற்போது கீழ்காணும் திட்டப்பணிகள் நடைபெற்று வருகிறது.

1) KNMT - 2024-2025 திட்டத்தின்கீழ் புதிதாக தினசரி சந்தை அமைக்கும் பணி ரூ.1460 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.
2) TURIP - 2024-2025 திட்டத்தின்கீழ் ரூ.972.80 இலட்சம் மதிப்பீட்டில் சாலை பணிகள் நடைபெற்று வருகிறது.
3) 15 CFC திட்டத்தின்கீழ் 58.10 இலட்சம் மதிப்பீட்டில் Dry Waste Contre பணி நடைபெற்று வருகிறது.

எனவே மேற்கண்ட திட்டப்பணிகள் நடைபெற்று வருவதால் இந்நகராட்சியில் திட்டப்பணிகள், களப்பணிகள் பார்க்க பணி ஆய்வாளர் இல்லாத காரணத்தால் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் மூலமாக தொழில்நுட்ப உதவியாளர் நிலை- II (Technical Assistant Grade II) பணி நியமனம் செய்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. இதற்கான மதிப்பீடு பொதுப்பணித்துறை தரப்படுத்தப்பட்ட பட்டியல் (PWD Schedule of Rate 2024-2025)-ன்படி தொழில்நுட்ப உதவியாளர் நாள் ஒன்றுக்கு ரூ.1205/- நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

ஒரு வருடத்திற்கு 365 நாள் x 1205 / நாள் = 4,39,825

| | | |
|---|---|---|
| GST 18% | = | 79,169 |
| LS | = | 1,000 |
| | | ----------------- |
| மொத்தம் | | 5,20,000 |
| | | ----------------- |

(ரூபாய் ஐந்து இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) ஆகும். மேற்கண்டுள்ள பணி மேற்கொள்ள மதிப்பீடு தொகைக்கு மன்றத்தின் முடிவிற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.2495/2024/இ1.

மன்றத்தீர்மான எண்.1071 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.9

குழித்துறை நகராட்சியில் வார்டு எண்.17-ல் வடக்குத்தெருவில் பஞ்சாப் நேஷனல் வங்கி முதல் லெட்சுமி விலாஸ் பேக்கரி வரையுள்ள மழைநீர் வடிகால் சீரமைக்க நகர்மன்ற தீர்மான எண்.1058, நாள்:24-10-2024-ன்படி ரூ.9.50 இலட்சம் மதிப்பீட்டில் மன்றம் அனுமதி வழங்கியுள்ளதின் அடிப்படையில் 15-11-2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | விழுக்காடு |
|---|---|---|
| 1 | திரு.A. ஆன்றணி | 0.23% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | திருமதி.P. சரோஜா | 0.06% மதிப்பீட்டை விட குறைவு |

மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியலின்படி மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தப்புள்ளி கோரிய திருமதி.P. சரோஜா என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்து மன்றத்தின் முடிவுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.கு:- மன்றம் முடிவு செய்யலாம்
ந.க.எண்.1002/2012/இ1

மன்றத்தீர்மான எண்.1072 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.10

குழித்துறை நகராட்சியில் வார்டு எண்.3 படப்பறை குளம் அருகில் தடுப்பு சுவர் அமைக்க நகர்மன்ற தீர்மான எண்.1051, நாள்:24-10-2024-ன்படி ரூ.1.20 இலட்சம் மதிப்பீட்டிற்கு மன்றம் அனுமதி வழங்கியுள்ளதின் அடிப்படையில் 15-11-2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | விழுக்காடு |
|---|---|---|
| 1 | திரு. ஜெயசிங் | 0.03% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு. ஜெயகுமார் | 0.04% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தப்புள்ளி கோரிய திரு.ஜெயசிங் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்து மன்றத்தின் முடிவுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.கு:- மன்றம் முடிவு செய்யலாம்
ந.க.எண்.2147/2024/இ1

மன்றத்தீர்மான எண்.1073 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.11

குழித்துறை நகராட்சி பொது சுகாதாரம் பிரிவிற்கு தொடர்பான தூய்மை சேவை-2024 என்ற தலைப்பில் விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகள் நடத்த கலைமாமணி திரு.அ.பழனியாபிள்ளை (அரசின் நலத்திட்ட விழிப்புணர்வு கிராமிய பாடல்) என்பவர் மார்த்தாண்டம் பேருந்து நிலையத்தில் வைத்து நடத்தப்பட்டுள்ளது. மேலும் கலை நிகழ்ச்சிகள் நடத்தியமைக்காக கலைஞர் ஒரு நபருக்கு 1200/- வீதம் 10 கலைஞர்களுக்கு 12000/- மற்றும் வாகன வாடகைக்கு 1000/- வீதம் ஆக மொத்தம் 13000/- செலவீனம் செய்யப்பட்டுள்ளது. ஆகையால் மேற்படி தொகையினை கலைமாமணி திரு.அ.பழனியாபிள்ளை என்பவருக்கு பொது நிதியிலிருந்து வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்
ந.க.எண்.2072/2024/H1

மன்றத்தீர்மான எண்.1074 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.12

குழித்துறை நகராட்சி பொது சுகாதாரம் பிரிவில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நகராட்சியில் (ODF++) மற்றும் திட மற்றும் திரவ கழிவுகள் மேலாண்மை திட்டத்தின் செயல்பாடுகள் மூலம் உள்ளாட்சி அமைப்புகளுக்கு குப்பை இல்லா நகரம் (GFC) தொடர்பான

தரச்சான்று பெறுவதற்கு செய்தி தாளின் மூலம் பொதுமக்களின் கருத்துகளை அறிவதற்காகவும் தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்த வகைக்கு பட்டியல் வரப்பெற்றது. நாளிதழ்களின் பட்டியல் தொகை கீழ்கண்டவாறு.

1. தமிழ் சுடர் - 14,700/-
2. விடுதலை - 12,784/-
3. தினமுரசு - 14,175/-

எனவே மேற்படி வரப்பெற்ற தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்ற அனுமதிக்கு.

அ.கு:- மன்ற அனுமதிக்கும் முடிவிற்கும்.

ந.க.எண்.2389/2024/H1

மன்றத்தீர்மான எண்.1075 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.13

குழித்துறை நகராட்சி பொது சுகாதாரம் பிரிவிற்கு டெங்கு தடுப்பு பணிக்காக புகை மருந்து அடிக்கும் இயந்திரம் சிறியது 2 மற்றும் (Indoor fogging) பெரியது 3 (Outdoor fogging) இயந்திரம் முழுமையாக பழுதடைந்துள்ளதால் அதனை சரி செய்த செலவின தொகை ரூ. 16360/- திருமதி.அஜிதா, களப்பணி உதவியாளர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையினை களப்பணி உதவியாளர் திருமதி. அஜிதா என்பவருக்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- அத்தியாவசிய பணிகளுக்கு செலவு மேற்கொண்டுள்ளதால் செலவின தொகை வழங்கலாம்.

ந.க.எண்.3256/2024/H1

மன்றத்தீர்மான எண்.1076 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.14

குழித்துறை நகராட்சியில் வார்டு எண்.16 Compost yard Sub Road (Unicode 149016R082) சாலையின் வடக்கு பக்கத்தில் மழைநீர் வடிகால் அமைக்க நகர்மன்ற தீர்மான எண்.1005, நாள்:19-09-2024-ன்படி உத்தேச மதிப்பீடு ரூ.1,90,000/-க்கு மன்ற ஒப்புதல் பெறப்பட்டு 15-11-2024-ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | விழுக்காடு |
|---|---|---|
| 1 | திரு.C. சுரேஷ் | 0.05% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.T. ராஜன் | 0.17% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியான மதிப்பீட்டை விட 0.05% குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.C. சுரேஷ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்து மன்றத்தின் முடிவிற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.கு:- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.1880/2024/இ1

மன்றத்தீர்மான எண்.1077 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.15

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் புதிய நவீன காய்கறி சந்தைக்கு அருகாமையில் உள்ள 400 சதுர மீட்டர் இடம் கொண்ட M.C.C. கட்டிடத்தில் தற்காலிக காய்கறி சந்தை அமைத்திட நகர்மன்ற தீர்மானம் எண்.1044, நாள் 24-10-2024-ன்படி மன்ற அனுமதி பெற்று 13-11-2024 அன்று ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை. கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | வைப்புத்தொகை ரூபாய் | மாத வாடகை தொகை ரூபாய் |
|---|---|---|---|
| 1 | திரு.கே. கிருஷ்ணாந்தன்,<br>த/பெ.பி. கருணகரன்,<br>18/57, கூட்டமாவு | 100000 | 70500/- |
| 2 | திருT-. சோமன்,<br>9/58, காட்டுவிளை தெரு,<br>உண்ணாமலைக்கடை | 100000 | 72000/- |

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் கூடுதல் மாதவாடகை தெரிவித்துள்ள திரு.T. சோமன் என்பவருக்கு தற்காலிகமாக காய்கறி சந்தை அமைப்பதற்கான ஒப்பந்த உரிமம் வழங்குவது குறித்து மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

அ.கு:- மன்றத்தின் முடிவிற்கும்.
ந.க.எண்.2170/2024/அ2

மன்றத்தீர்மான எண்.1078 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.16

குழித்துறை நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு சம்பந்தமான மாவட்ட ஆட்சியாளர் அவர்களின் ஆய்வு கூட்டம் நாள் 07-10-2024-ன்படி உணவு பாதுகாப்பு துறை மூலம் முன் எடுக்கப்பட்ட அனைத்து கடைகளுக்கு புகையிலை குட்கா மற்றும் COOLIP விற்பனை செய்யப்படுவதில்லை என்ற 100 எண்ணம் (Board) வைக்கப்பட்டதற்கு செலவின தொகை ரூ.4000/-யினை துப்புரவு பணி மேற்பார்வையாளர் திரு.ராதாகிருஷ்ணன் என்பவரால் கொடுக்கப்பட்டது. ஆகையால் மேற்படி தொகையினை துப்புரவு பணி மேற்பார்வையாளர் திரு.ராதாகிருஷ்ணன் என்பவருக்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- அத்தியாவசிய பணிகளுக்கு செலவு மேற்கொண்டுள்ளதால் செலவின தொகை வழங்கலாம்.
ந.க.எண்.3256/2022/H1

மன்றத்தீர்மான எண்.1079 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.17

குழித்துறை நகராட்சி பொது சுகாதார பிரிவில் பணிபுரியும் துப்புரவு தூய்மை பணியாளர்களுக்கு, துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள், வாகன ஒட்டுநர்கள், அலுவலக உதவியாளர்கள், மகப்பேறு மாது உதவியாளர், மின் கம்பி உதவியாளர் ஆகியோருக்கு 2024-2025 ஆண்டிற்கான சீருடை மற்றும் காலணிகள் வாங்குவதற்கு ஏற்கனவே நகர்மன்றத்தில் அனுமதி பெறப்பட்டது நகர்மன்ற தீர்மான எண்.1024, நாள் 24-10-2024. மேலும் துப்புரவு தூய்மை பணியாளர்களுக்கு தையல் கூலி வழங்கிட ஆண் பணியாளர் 16, பெண் பணியாளர் 11, ஆண் பணியாளருக்கு 1 ஜோடிக்கு ரூ.400/- வீதம் இரண்டு ஜோடிக்கு ரூ.800/-, பெண் பணியாளருக்கு 1 ஜோடிக்கு ரூ.40/- வீதம் இரண்டு ஜோடிக்கு ரூ.80/- வழங்கவும், அதற்கான செலவினமாக ரூ.13680/- நகராட்சி பொது நிதியிலிருந்து செலவிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2344/2015/எச்1

மன்றத்தீர்மான எண்.1080 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.18

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட பழைய பாலத்தில் பொதுமக்கள் பாதுகாப்பு கருதி தெருவிளக்கு அமைத்திட ரூ.3,60,000/- உத்தேச மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.2566/2024/இ1

மன்றத்தீர்மான எண்.1081 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.19

குழித்துறை நகராட்சி வார்டு எண்.11 வெட்டுமணி சப்பாத்தில் மீன்சந்தை கட்டிடம் பழுது ஏற்பட்டுள்ளதால் அதனை சீரமைக்க நகர்மன்ற தீர்மான எண்.851, நாள்:20-02-2024-ல் ரூ.9,80,000/- மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி பெறப்பட்டு 15-11-2024-ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | விழுக்காடு |
|---|---|---|
| 1 | திரு.P. ஜெயசந்திரன் | 0.07% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.P. ஜெயபிரகாஷ் | 0.29% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியான மதிப்பீட்டை விட 0.07% குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.பி. ஜெயசந்திரன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்து மன்றத்தின் முடிவிற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.கு:- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.345/2024/இ1

மன்றத்தீர்மான எண்.1082 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.20

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான வெட்டுமணி சிறுவர் பூங்காவில் சுற்றுசுவர் அமைக்கவும், பராமரிப்பு பணி மேற்கொள்ளவும் நகர்மன்ற தீர்மான எண்.1050, நாள்:24-10-2024-ல் மன்ற அனுமதி ரூ.3,20,000/-க்கு பெறப்பட்டு 15-11-2024-ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | விழுக்காடு |
|---|---|---|
| 1 | திரு.T. ராஜன் | மதிப்பீட்டு விலை விகிதம் |
| 2 | திரு. ஜெயபிரகாஷ் | 0.60% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியான திரு.T. ராஜன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்து மன்றத்தின் முடிவிற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.கு:- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.2123/2024/இ1

மன்றத்தீர்மான எண்.1083 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.21

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான கருங்கல் சாலையில் அமைந்துள்ள பொதுகழிப்பிடத்தில் கூடுதலாக இரண்டு கழிவறை அமைத்திட நகர்மன்ற தீர்மான எண்.1049, நாள்:24-10-2024-ன்படி ரூ.5,00,000/- மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளதின் அடிப்படையில் 15-11-2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | விழுக்காடு |
|---|---|---|
| 1 | திரு.T. ராஜன் | மதிப்பீட்டு விலை விகிதம் |
| 2 | திரு.P. ஜெயபிரகாஷ் | 0.42% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் மதிப்பீட்டு விலை விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி கோரிய திரு.T. ராஜன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்து மன்றத்தின் முடிவிற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.கு:- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.2124/2024/இ1.
மன்றத்தீர்மான எண்.1084 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.22

குழித்துறை நகராட்சியில் பழுதடைந்துள்ள 5 கணினிகளை பழுதுநீக்கம் செய்திட உத்தேச செலவினம் ரூ.1,00,000/- நகராட்சியின் பொதுநிதியில் செலவிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.2550/2024/இ1.
மன்றத்தீர்மான எண்.1085 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.23

குழித்துறை நகராட்சியின் பொது சுகாதார வாகன எண்.TN.75L.5874 Dumper Plazer வாகனமாக பயன்படுத்தப்பட்டு வந்தது. அதனை தற்சமயம் பயன்படுத்த இயலாததால் அவ்வாகனத்தின் Dumper Plazer மாற்றி Open Body வாகனமாக மாற்றியமைத்திட உத்தேச செலவினம் ரூ.4,00,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.2633/2024/இ1.
மன்றத்தீர்மான எண்.1086 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.24

குழித்துறை நகராட்சியில் வார்டு எண்.5 பெருந்தெரு சாலை முதல் பெருந்தெரு மீன்சந்தை வரையிலான மழைநீர் வடிகால் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ.2,70,000/- (ரூபாய் இரண்டு இலட்சத்து எழுபதாயிரம் மட்டும்) தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.2637/2024/இ1.

மன்றத்தீர்மான எண்.1087 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.25</u>

குழித்துறை நகராட்சியில் வார்டு எண்.9 விளவங்கோடு சாலையில் சிறுபாலம் அமைத்திட உத்தேச மதிப்பீடு ரூ.5,00,000/- (ஐந்து இலட்சம் மட்டும்) தயாரிக்கப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு :-</u> மன்றம் முடிவு செய்யலாம்
**ந.க.எண்.**2639/2024/E1

மன்றத்தீர்மான எண்.1088 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.26</u>

குழித்துறை நகராட்சியில் வார்டு எண்.6 பெருந்தெரு சாலை முதல் பெருந்தெரு மீன்சந்தை வரையிலான மழைநீர் வடிகால் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ.2,10,000/- (இரண்டு இலட்சத்து பத்தாயிரம் மட்டும்) தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு:-</u> மன்றம் முடிவு செய்யலாம்
**ந.க.எண்**:2638/2024/E1

மன்றத்தீர்மான எண்.1089 அனுமதிக்கப்பட்டது.
<u>பொருள் எண்.27</u>

2023-2024-ம் ஆண்டிற்கான குழித்துறை நகராட்சியின் நிர்வாக அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும்.

<u>அ.கு.-</u> மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
**ந.க.எண்.**1289/2023/சி1.
மன்றத்தீர்மான எண்.1090 அனுமதிக்கப்பட்டது.

ஒப்பம்/- திரு.பொன். ஆசைத்தம்பி,
நகர் மன்றத்தலைவர்,
குழித்துறை நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.